# தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!



---

### உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் பங்களிப்புக்கு ஏற்ப

## மேம்படுத்தப்பட்ட நிதி உதவி வழங்கிடும் திட்டமுள்ளதா?

### மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, டிச. 14 -
நாட்டில்உள்ளநகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதன் வருவாய் பங்களிப்புக்கு தக்கவாறு மேம்படுத்தப்பட்ட நிதி உதவியை வழங்கஒன்றியஅரசுதிட்டமிட்டுள்ளதா? என்று மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

நகர்ப்புற மற்றும் கிராமப்புறஉள்ளாட்சிஅமைப்புகளுக்கு வருமானம் ஈட்டுவதற்கும் கருவூலத்திற்கான பங்களிப்புக்கும் ஏற்றவாறு மேம்படுத்தப்பட்டநிதிஉதவியைவழங்கஒன்றியஅரசு திட்டமிட்டுள்ளதா? அப்படியானால்> அதன் விவரங்கள் யாவை?

GSTஅமலாக்கத்தின்காரணமாக நகர்ப்புற உள்ளாட்சிஅமைப்புகள்(ULBs) மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு (RLBs) ஒன்றிய அரசு ஏதேனும் இழப்பீடு வழங்குகிறதா? அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும்

நாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படும் ULBs மற்றும் RLB களின் வளர்ச்சி மற்றும் நலனுக்காக போதுமான நிதியை வழங்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

இதற்கு ஒன்றிய அரசின் பஞ்சாயத்து ராஜ் துறை ராஜாங்க அமைச்சர் பேராசிரியர். எஸ்.பி. சிங் பாகேல் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

இந்திய அரசியலமைப் பின்பிரிவு280-மத்தியநிதிக் கமிஷன்கள் மத்திய நிதிக் குழுக்கள் மத்திய- மாநிலங்கள் மற்றும் அந்தந்த உள்ளாட்சிஅமைப்புகளின்நிதி நிலையை மதிப்பிடுவதற்கும்- ஜிஎஸ்டி மற்றும் பல்வேறு மானியங்களை உள்ளடக்கிய வரிகளைப் பகிர்வதற்குப் பரிந்துரைப்பதற்கும் அடிப்படையை வழங்குகிறது. மாநிலங்கள்- பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளுக்கான நோக்கங்கள். அதன்படி பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளின் வளங்களை நிரப்புவதற்கும்- பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளின் நிதி நிலையை மேம்படுத்த தேவையான பிற நடவடிக்கைகளுக்கும்பரிந்துரைகளை வழங்குவதற்காக பதினாறாவது நிதிக் குழுவை ஒன்றிய அரசு அமைத்துள்ளது.



உள்ளாட்சி அமைப்புகளின் போதுமான நிதி மற்றும் வளர்ச்சியை உறுதி செய்ய இந்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான (ULBs) முக்கிய முன்முயற்சிகளில் செயல்திறன் இணைக்கப்பட்ட திட்டங்கள் 15வது நிதிக் குழுவின் கீழ் மில்லியன்பிளஸ்சிட்டிஸ்சேலஞ்ச் ஃபண்ட் மற்றும் 2023- 24 மூலதன முதலீட்டிற்கான மாநிலங்களுக்குசிறப்புஉதவிக்கானதிட்டம்ஆகியவை அடங்கும்.

2021-22 முதல் 2023-24 வரையான நிதியாண்டுகளுக்குஇடைப்பட்டகாலத்தில் கோயம்புத்தூர்- சென்னை - திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரைஆகியநான்குமில்லியனுக்கும்அதிகமானநகர்ப்புற ஒருங்கிணைப்புகளுக்காகதமிழ்நாடுரூ.1>264.20 கோடியைப் பெறுவதன் மூலம்மில்லியன்பிளஸ்சிட்டிஸ் சேலஞ்ச் ஃபண்ட் போன்ற திட்டங்களால் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் (ULBs) பயனடைந்துள்ளன.

2020-21 நிதியாண்டு முதல் 2024-25 நிதியாண்டு வரையிலான 22,10,862.42 கோடிரூபாய்மானியங்கள் 15வது நிதி ஆணையத்தின் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான (RLBs) ஒதுக்கீடுகளின்படி தமிழ்நாட்டில் RLBகளுக்காக வெளியிடப்பட்ட13>303.50கோடிஉட்பட நாடு முழுவதும் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வாறுஅமைச்சர்கூறினார்.

---

### செங்கல்பட்டில் மூடிக்கிடக்கும்

## தடுப்பூசி மையத்தை உடனடியாகத் திறந்திடுவீர்!

### மக்களவையில் – டாக்டர் கலாநிதி வீராசாமி வலியுறுத்தல்!

புதுடெல்லி,டிச.13-
“செங்கல்பட்டில் மூடிக்கிடக்கும் தடுப்பூசி மையத்தை உடனடியாக திறந்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்” என நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் கலாநிதி வீராசாமி வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் மக்களவையில் பேசியதாவது:

செங்கல்பட்டிலுள்ளஇந்துஸ்தான்பயோலிமிடெட் என்னும் ஒன்றிய நிறுவனத்தின் ஒருங்கிணைந்த தடுப்பூசி மையம் பல ஆண்டுகளாக செயல்படாமல் உள்ளது. பலவகையான நோய்களுக்கான தடுப்பூசிகளைத் தயாரிப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்புவசதியுடன்அமைந்துள்ள இந்த தடுப்பூசி மையத்திற்குத் தற்போது தேவைப்படும்சிறு முதலீட்டுக்கான நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கினால், இம்மையத்தில் தடுப்பூசி தயாரிப்பை துவங்க இயலும்,



ஒன்றியமக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக இம்மையத்துக்குச்சென்றுஆய்வுசெய்துள்ளார். அவருடன்மாநிலமக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் சென்றிருந்தார். நானும்இம்மையத்துக்கு26.5.2021அன்றுசென்று நேரடியாக அங்குள்ள உட்கட்டமைப்பையும் ஆய்வு செய்துள்ளேன்.

தமிழக முதல்வரும் ஒன்றிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைச் சந்தித்து,தேவையானவற்றை எடுத்து கூற ஒரு மருத்துவ குழுவினரையும் அனுப்பி இருந்தார். மேலும் தமிழக முதல்வர்அவர்கள்17.6.2021 அன்று பிரதமர் அவர்களை சந்தித்தபோது, இந்த தடுப்பூசிமையம்மீண்டும்செயல்படுத்தப்பட வேண்டும் எனக் கோரி ஒரு மனுவையும் அளித்துள்ளார். ஆயினும்ஒன்றியஅரசுஇதுவரை இம்மையத்தை முழுமையாக செயலாக்கத்துக் கொண்டுவரஅனுமதிவழங்கவில்லை.

இந்நிலையில், நான் ஒன்றிய அரசை இந்த தடுப்பூசி மையம் செயல்படுவதற்கான அனுமதியை வழங்கக் கோரி, மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. பேசினார்.

---

### நாட்டின் அணு மின் நிலையங்களில் பணி புரியும்

## ஊழியர்களுக்கு சாதக பணிச் சூழல் வழங்கப்படுகிறதா?

### மாநிலங்களவையில் – இரா.கிரிராஜன் கேள்வி

புதுடெல்லி, டிச. 14 -
நாட்டின் அணு மின் நிலையங்களில்பணிபுரியம் ஊழியர்களுக்கு சாதக பணிக் சுழல் வழங்கப்படுகிறதாஎன்றுமாநிலங்களவையில் கழக உறுப்பினர் இரா. கிரிராஜன் கேள்வி எழுப்பினார்.

நாட்டின் அணு மின்நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களின் விவரங்கள் கேட்டு கழக மாநிலங்களவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் கேள்வி எழுப்பி உள்ளார்.



இந்த அணுமின் நிலையங்களை ஆய்வு செய்ய ஏதேனும்சோதனைமற்றும் கண்காணிப்பு அமைப்பு உள்ளதா, அனைத்து அணு மின்நிலையங்களிலும்பணியாளர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட SoP களை கடைபிடிக்கின்றனரா என்பது குறித்து விவரங்கள் என்ன,நடைமுறையிலுள்ள திட்டங்களின்எண்ணிக்கை மற்றும் அதில் தொடர்புடைய ஒப்பந்த ஊழியர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சாதகமான பணிச்சூழலை வழங்குவதற்கானநடவடிக்கைகள் குறித்த விவரங்களையும் வெளியிட வேண்டும்.

இவ்வாறு அவர் கேட்டுள்ளார்.

---

### கிராமப் பஞ்சாயத்துகளில் மின் ஆளுகைத் திட்டம்:

## தமிழ்நாட்டில் நூறு சதவிகிதம் அமல்படுத்தப்படுகிறது!

### மாநிலங்களவையில்–டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமுவின்

### கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி,டிச.14-
கிராமப் பஞ்சாயத்துக்களில்அமல்படுத்தப்படும்முன் ஆளுமைத் திட்டத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப உதவியோடுபலனடைந்தகிராமப் பஞ்சாயத்துக்கள் எத்தனை? அதற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு ஒன்றிய பஞ்சாயத்து ராஜ் துறை இணையமைச்சர் எஸ்.பி. சிங் பாகல் அளித்த பதில் வருமாறு:

டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் அமல்படுத்தப்படும் மின் ஆளுமைத் திட்டத்தைநாடுமுழுக்கஒன்றிய அரசுஅமல்படுத்திவருகிறது. கிராம நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை, பதவியில் இருப்பவர்களுக்கு பொறுப்பை உணர்த்துதல் ஆகியவற்றை உறுதி செய்து, திறமையான நிர்வாகத்தை தொழில்நுட்ப உதவியுடன் வழங்குவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தின் ஒருபகுதியான இ-கிராம சுயராஜ்யத்திட்டத்தின்கீழ், அந்தந்த



கிராமப் பஞ்சாயத்துக்களில் ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தப்படும்வளர்ச்சித்திட்டங்கள் தொடர்பான ஆவணங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இந்தத் திட்டத்துடன் பொது நிதி நிர்வாகச் செயல்பாடுகளையும் இணைத்ததன் மூலம், பஞ்சாயத்துகளுக்குபொருளோசேவையோ அளித்தவர்களுக்கான கட்டணம் தாமதமின்றி அந்தந்த நாளிலேயே வழங்கப்படுகிறது.

இதே திட்டத்தின் கீழ், கிராமப் பஞ்சாயத்துகளுக்கு வாங்கப்படும்பொருட்களை வெளிப்படைத் தன்மையோடு நியாயமான முறையில் வாங்க இ-மார்க்கெட்டிங் என்ற பிரத்யேக செயலியும் வடிவமைக்கப்பட்டுள்ளது. உள்ளூர்வாசிகள் இதனால் பெரும் பயனடைவார்கள்.

இதுதவிர, ஆன்லைன் ஆடிட் என்ற செயல்திட்டமும் அமல்படுத்தப்பட்டுள்ளது. மத்திய நிதி ஆணையத்தின் மூலம் கிராமப் பஞ்சாயத்துக்களால் பெறப்படும் நிதி எதற்காக, எவ்வளவு, எப்படி செலவிடப்பட்டது என்ற விபரங்களை இணையத்தில் பதிவேற்றம் செய்வதை இந்த ஆன்லைன் ஆடிட் திட்டம் உறுதிசெய்கிறது. இதனால்கிராமப்பஞ்சாயத்துகளின்நிதிமேலாண்மை மேம்படும்.

அந்தந்த கிராமங்களில் நடக்கும் வளர்ச்சித் திட்டங்கள், நிதி ஆதாரங்கள், செலவுகள் பற்றி உள்ளூர் பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் தனியாக ஒரு போர்ட்டல்உருவாக்கப்பட்டுள்ளது. கிராமசபைக்கூட்டங்களை அர்த்தமுள்ள வகையிலும், பயனுள் வகையிலும் நடத்த பஞ்சாயத் நிர்ணய் என்ற செயலி உதவுகிறது.

இந்தத் திட்டங்களை செயல்படுத்த ஆகும் செலவுகள் மாநில அரசுகளுக்கு அனுப்பப்படுவதில்லை. தேசியதகவல்மையச்சேவைகள் நிறுவனத்திற்கு நிதி நேரடியாக வழங்கப்படுகிறது. அவர்களேஇதற்கானசெலவுகளைச் செய்கிறார்கள்.

தமிழ்நாட்டைப்பொறுத்தவரை, மொத்தமுள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளில்12,501(99.8%)கிராமப் பஞ்சாயத்துகள் மின் ஆளுமைவசதியைப்பெற்று, திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றன.

இவ்வாறு அமைச்சர் எஸ்.பி. சிங் பாகல் தெரிவித்தார்.

---

### திருச்சி – தாம்பரம் சிறப்பு ரயிலை நிரந்தரமாக தினசரி இயக்கிடல் உள்ளிட்ட கோரிக்கைகள்!

## இரயில்வே அமைச்சரிடம் - தஞ்சை ச.முரசொலி எம்.பி. வலியுறுத்தல்!

### புதுடெல்லியில் நேரில் சந்தித்து மனுஅளித்தார்!

**புதுடெல்லி, டிச. 14-**
**திருச்சி -தாம்பரம் சிறப்பு இரயிலினை நிரந்தரமாக தினசரி இயக்கவும், தாம்பரம் - இராமேஸ்வரம் இரயிலினை பட்டுக்கோட்டை பேராவூரணி வழிதடத்தில் இயக்கவேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவை சந்தித்து தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி வலியுறுத்தினார்.**

தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி நேற்று, புது டெல்லியில் ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவை அவர்களை நேரில்சந்தித்து, பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளித்தார்

அதில் திருச்சி - தாம்பரம் சிறப்புஇரயிலைநிரந்தரமாக தினசரி இயக்க வேண்டும்,



தாம்பரம் - இராமேஸ்வரம் இரயிலினை பட்டுக்கோட்டை, பேராவூரணி வழித்தடத்தில் இயக்கிட வேண்டும்,

தஞ்சாவூர் பெங்களூர் "வந்தே பாரத்" புதிய இரயிலினை இயக்கவும்,

மன்னார்குடி - சென்னை தஞ்சாவூர் வழியாக வந்தே பாரத் புதிய இரயிலினை இயக்கவேண்டும் எனவும்,

மதுரை - புனலூர் இரயிலினை தஞ்சாவூர் வழியாக வேளாங்கண்ணி வரையில் இயக்கிடவும்,

சென்னை - எழும்பூர் காரைக்குடி கம்பன் விரைவு இரயிலை மீண்டும் இயக்க வேண்டும்,

தாம்பரம் - செங்கோட்டைவிரைவுஇரயிலை வாரம் ஏழு நாட்களும் இயக்கவும்,

மன்னார்குடி பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் புதுக்கோட்டை, தஞ்சாவூர் அரியலூர் ஆகிய புதிய இரயில் வழித்தடங்களை அமைத்திடவும்,

திருச்சி- பாலக்காடு பேசஞ்சர் மற்றும் திருச்சி ஹௌரா விரைவு வண்டியினை தஞ்சாவூர் வரை நீட்டிப்பு செய்யவும்,

தஞ்சாவூர் - விழுப்புரம் மெயின் லைனை ஒரு வழி பாதையில்இருந்துஇருவழிப் பாதையாகஅமைப்பதற்கும்,

பேராவூரணி, அதிராம் பட்டினம், பூதலூர், ஆலக்குடி,அய்யனாபுரம்,நீடாமங்கலம், பாபநாசம் ஆகிய இரயில் நிலையங்களில் பல்வேறு இரயில்களை நிறுத்தம் செய்வதற்கும், மற்றும் தஞ்சைநாடாளுமன்றதொகுதிக்குட்பட்ட இரயில்வே துறைதொடர்பானபல்வேறு கோரிக்கைகளைவலியுறுத்தி நிறைவேற்றி தருமாறு கோரிக்கை வைத்தார்.

---

### ‘பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா’ திட்டம்!

## தகுதியானவர்கள் பலன் பெறுவது உறுதி செய்யப்படுகிறதா?

### மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி,டிச.14-
நாடாளுமன்ற மக்களவையில் பிரதான் மந்திரி ஆவாஸ்யோஜனாதிட்டம் குறித்துகழகஉறுப்பினர்தருமபுரிஆ.மணிகேள்விஎழுப்பினார்.

அது பற்றி விவரம் வருமாறு:

பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் (PMAY) கீழ் தகுதியான நபர்கள் பலன் பெறுவதை ஒன்றிய அரசு உறுதி செய்துள்ளதா?.

அதேப்போல்பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்,பட்டியலிடப்பட்ட சாதியினர், பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் பெண்கள், தலைமைத்துவக் குடும்பங்களை சேர்ந்த அனைவரும் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (PMAY) திட்டத்தின் கீழ் பயன்பெறும்வகையில்ஒன்றியஅரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் அதன் விவரங்கள் என்ன?

அதேப்போல் மாநிலங்கள்மற்றும்யூனியன்பிரதேசங்கள் வாரியாக கட்டப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட வீடுகளின் விவரங்கள் என்ன?.

குறிப்பாக பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (PMAY) திட்டத்தை செயல்படுத்துவதில் எதிர்கொள்ளும்முக்கியசவால்கள்,அதிலும் குறிப்பாக பெருநகரங்களில் இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டி ஒதுக்கீடு செய்வதை விரைவுபடுத்துவதற்குமற்றும்நிர்வாக செயல்முறைகளை எளிதாக்குவதற்குமானதிட்டங்கள் என்ன மற்றும் அதன் விவரங்கள் என்ன என்று கேட்டிருந்தார்.

இதையடுத்து அதற்கு ஒன்றிய இணை அமைச்சர் தோகன் சாஹு எழுத்துப் பூர்வமாகஅளித்தபதில்கள்

"நிலம்' மற்றும் காலணிமயமாக்கல்மற்றும்அந்தந்த பகுதிகளில்வீடுகள்தொடர்பான திட்டங்களை மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேசங்களால் செயல்படுத்தப்படுகின்றன.



இருப்பினும் ஜூன், 2015ம்ஆண்டுமுதல்பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த அனைத்துதகுதியானநகர்ப்புற பயனாளிகளுக்கும் அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடுகளை வழங்குவதற்காக, பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (PMAY) திட்டத்தின் மூலம் ஒன்றிய அரசு உதவி புரிகிறது.

மேலும் இத்திட்ட வழிகாட்டுதலின் படி, கையால் துப்புரவு செய்பவர்கள், பெண்கள் (முன்னுரிமை அளிக்கப்பட்ட விதவைகள்), தாழ்த்தப்பட்ட, பட்டியலிடப்பட்ட பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேலும் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (PMAY) திட்டத்தின்மூலம்மாநிலங்கள்மற்றும்யூனியன்பிரதேசங்கள் வாரியாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட வீடுகளின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. (இணைப்பில் உள்ளன)

இதில் குறிப்பாக தமிழ்நாட்டைபொருத்தமட்டில் 6,80,347 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 5,87,352 வீடுகள் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

---

### தென்காசியில் எம்.எப்.ஐ. – எஸ்.ஹெச்.ஜி

## தனியார் நிதி நிறுவனங்கள் கடன் வழங்குவதில் கொள்ளை!

### மக்களவையில்–டாக்டர்ராணி ஸ்ரீகுமார்நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்!

புதுடெல்லி,டிச.14-
தென்காசியில் எம்.எப்.ஐ மற்றும்எஸ்.ஹெச்.ஜிதனியார் நிதி நிறுவனங்கள் கடன் வழங்குவது என்ற கோணத்தில் கொள்ளையடிக்கும் நடைமுறைக்கு எதிராக ஒன்றிய அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார்ஒன்றியஅரசுக்குவலியுறுத்தியுள்ளார்.

மக்களவையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் ஆர்டிக்கல் 377 ன் படி வலியுறுத்தி பேசினார். அதில்," தென்காசியில் சில சிறுநிதி நிறுவனங்கள் (எம்.எப்.ஐக்கள்) மற்றும் தனியார் சுயஉதவி குழுக்கள் (எஸ்.எச்.ஜிக்கள்) ஆகியவற்றால் பாதிக்கப்படக்கூடியசமூகங்களிடம் ஆபத்தான முறையில் சுரண்டுவது தொடர்பான எனது கேள்விகள் உள்ளன. குறிப்பாக மேற்கண்ட இந்த நிறுவனங்கள்தனிநபர்களுக்கு அதிகாரம் அளிப்பதில்லை.



மாறாக கடன் வழங்குவது என்ற கோணத்தில் கொள்ளையடிக்கும் நடைமுறைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது அந்த மக்களை ஆழ்ந்ததுயரத்தில் தள்ளுகின்றது.

இதுபோன்ற பிரச்சினைகளின் விளைவாக பாதிக்கப்படும் மக்கள் தங்களது குடும்பங்களை இடம்பெயர்த்துக் கொள்வது மட்டுமில்லாமல், சில நேரங்களில் நிதி நிறுவனங்களின் அழுத்தத்தால் தனிநபர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் மிக சோகமான விளைவுகளையும் ஏற்படுத்துகிறது.

குறிப்பாக பாரம்பரியமாக பலருக்கு வாழ்வாதாரமாக விளங்கும்பீடி மற்றும்தீப்பெட்டித் தொழில்கள் கடுமையான சரிவைச்சந்திக்கும் பகுதிகளில் இந்த துயரம் என்பது மிகவும் கடுமையான ஒன்றாகும்.

தேவை குறைவாலும், அதிகரித்து வரும் செயல்பாட்டுச் செலவுகளாலும், இந்தத் தொழில்களில் உள்ள தொழிலாளர்கள்மற்றும்சிறிய அளவிலானஉற்பத்தியாளர்கள்உயிர் வாழ்வதற்காகமேற்கண்டநிதி நிறுவனங்களிடம் இருந்து கடன் வாங்கும் பரிதாபமான கட்டாயத்தில் உள்ளனர்.

இதுபோன்ற கடன் சுழற்சி அந்த குடும்பங்கள் மீது கடுமையானசமூக மற்றும் உணர்ச்சிப் பூர்வமானபாதிப்புகளைஏற்படுத்தியுள்ளது.

கடன் வழங்குபவர்களால் துன்புறுத்தல், பொது அவமானம் மற்றும் இடைவிடாத மீட்பு உத்திகள் ஆகியவை கடன் வாங்குபவர்களுக்கு தாங்க முடியாத மன உளைச்சலுக்கும் வழிவகுத்துகிறது.

எனவே இந்த இக்கட்டான நெருக்கடிக்கு தீர்வு காண ஒன்றிய அரசு உடனடியாக அவசர கால நடவடிக்கையை எடுக்க வேண்டும்.இதில்முதலாவதாக, உள்ளூர்மொழிகளில்வழங்கப்படும்தெளிவானமற்றும்அணுகக்கூடிய விதிமுறைகளுடன், கடன் வழங்கும் நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்த எம்.எப்.ஐக்கள்மற்றும்எஸ்.ஹெச்.ஜி ஆகியநிறுவனங்கள்கண்டிப்பாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

கூடுதலாக, வட்டி விகிதங்களில்வரம்புகள்மற்றும்சுரண்டல் நடைமுறைகளுக்கு கடுமையான அபராதங்களை ஒன்றிய அரசு விதிக்கும் விதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும்கடன்வாங்குபவர்கள் தங்கள் உரிமைகளை நன்கு புரிந்து கொள்ள நிதி கல்வியறிவு பிரச்சாரங்கள் மூலம் அதிகாரம் பெறவும் உரியசட்டநடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் வலியுறுத்திப் பேசினார்.